இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை - 6
அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை: மருத்துவர். டி. எஸ். செல்வவிநாயகம், எம்டி., டிபிஎச்., டிஎன்பி.,

ந.க.எண்.104199/ப.தொ.4/2018 /இரு3

நாள் :28.06.2021

பொருள்: பணியாளர் தொகுதி - பொது சுகாதாரம்- தமிழ்நாடு அமைச்சுப்பணி - திரு.எ.வெனிஸ் பெர்லின் அலெக்ஸாண்டர், தா/பெ (அமரர்) திரு.எம்.எஸ்.தேவி சொர்ணலீலா - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம்- பணிவரன்முறை செய்தல் - ஆணை பிறப்பித்தல்-தொடர்பாக.

பார்வை:
1. இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.104199/ப.தொ.4/2018 /இரு3, நாள்:08.03.2019.
2. திட்ட அலுவலர் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்பு திட்ட அலகு, நாகர்கோவில் அவர்களின் கடித 417/அ1/2019, நாள்:17.10.2019.
3. இவ்வலுவலக ந.க.எண்.104199/ப.தொ.4/2018 /இரு3,நாள்:06.05.2020.
4. அரசாணை (நிலை) எண்.48,தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை,நாள்:26.02.2021
5. அரசு கடித எண். 26341/ஏபி1/2021-1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை,நாள்:12.03.2021.

*******

**ஆணை:**

இத்துறையில் நாகர்கோவில் சுகாதாரப் பகுதி மாவட்டம், அழகப்பபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் துணை செவிலியராக பணிபுரிந்த திருமதி.எம்.எஸ்.தேவி சொர்ணலீலா என்பவர் 19.04.2006 தேதியில் காலமாகியுள்ளார். அவருடைய மகன் திரு.எ.வெனிஸ் பெர்லின் அலெக்ஸாண்டர் என்பவர் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு திட்ட அலுவலர் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்பு திட்ட அலகு, நாகர்கோவில் அலுவலகத்தில் பணியில் இணைந்துள்ளார். இத்தனியரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை அவர் பணியில் இணைந்த நாளான 13.03.2019 அன்று முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு பார்வை மூன்றில் காணும் கடிதத்தில் திட்ட அலுவலர் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்பு திட்ட அலகு, நாகர்கோவில் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. இந்நேர்வில் அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை, நாள்:26.02.2021, பத்தி எண்.(5.1) இல் " 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறை செய்யலாம் என அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

3. எனவே, இந்நேர்வில் கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.எ.வெனிஸ் பெர்லின் அலெக்ஸாண்டர், தா/பெ (அமரர்) திரு.எம்.எஸ்.தேவி சொர்ணலீலா என்பவர் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இத்துறையில் 13.03.2019 அன்று பணியில் சேர்ந்த

பணிபுரிந்து வருகிறார். எனவே, இத்தனியரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை, நாள்:26.02.2021 இல் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகள் / விதிமுறைகளுக்குட்பட்டும் மற்றும் இந்நேர்வில் எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத காரணத்தினால் திரு.எ.வெனிஸ் பெர்லின் அலெக்ஸாண்டர், தா/பெ (அமரர்) திரு.எம்.எஸ்.தேவி சொர்ணலீலா என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை தமிழ்நாடு அமைச்சுப்பணியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்தறையில் அவர் பணியில் சேர்ந்த நாளான 13.03.2019 அன்று முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

தி.ச.செல்வவிநாயகம்
இயக்குநர்
பொது சுகாதாரம் மற்றும் நோய்த்
தடுப்பு மருந்துத்துறை, சென்னை-6

பெறுநர்:
திரு.எ.வெனிஸ் பெர்லின் அலெக்ஸாண்டர், இளநிலை உதவியாளர்,
திட்ட அலுவலர் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்பு திட்ட அலகு, நாகர்கோவில்
திட்ட அலுவலர் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்பு திட்ட அலகு, நாகர்கோவில் : மூலமாக
நகல்

**திட்ட அலுவலர் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்பு திட்ட அலகு, நாகர்கோவில்:- பதிவஞ்சல் ஒப்புகையுடன்-** ( தனியரின் பணிவரன்முறை தொடர்பான உத்தரவினை பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளுமாறு திட்ட அலுவலர் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்பு திட்ட அலகு, நாகர்கோவில் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் தனியரின் கீழ்கண்ட சான்றுகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகின்றது அதனை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை அளிக்குமாறு திட்ட அலுவலர் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்பு திட்ட அலகு, நாகர்கோவில் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)

1. பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்று (அசல்)
2. மாற்றுச் சான்று (அல்)

**துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் நாகர்கோவில்:- பதிவஞ்சல் ஒப்புகையுடன்-** (மறைந்த அரசு ஊழியர் திருமதி.எம்.எஸ்.தேவி சொர்ணலீலா என்பவரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகின்றது அதனை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை அளிக்குமாறு துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் நாகர்கோவில் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)நகல்
மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையம், அழகப்பபுரம், நாகர்கோவில்
சுகாரதாரப் பகுதி மாவட்டம்.
இவ்வலுவலக ப.தொ.4 பிரிவின் இருக்கை 4.
இருப்புக்கோப்புஉபரி-2

//உண்மை நகல்//உத்தரவின்படி//அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்
2/7/2021

ந.க.எண். 417/அ1/2021 நாள் 13.10.2021
நகல் அனுப்பப்படுகின்றது.

யானைக்கால் நோய் தடுப்பு அலுவலர்
தேசிய யானைக்கால் நோய் தடுப்பு அலகு
13.10.2021 நாகர்கோவில் - 1

பெறுநர் திரு. அ. வெனிஸ் பெர்லின் அலெக்ஸாண்டர்,
இளநிலை உதவியாளர்,
தேசிய யானைக்கால் நோய்த்தடுப்புத் திட்ட அலகு, நாகர்கோவில்

Received

attested

FILARIA OFFICER
NATIONAL FILARIA CONTROL UNIT
NAGERCOIL-1.